சிறப்பிதழ்
**Special Issue**

***Chief Editor***
*Dr. M. Sadik Batcha*

***Advisory Editor***
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

**3-4 பங்குனி 2052**
**16th - 17th March 2021**

**ISSN : 2321 - 984X**

# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)*

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பாளையம், திருச்செங்கோடு
முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்)
வீராச்சிபாளையம், சங்ககிரி

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**

**முனைவர் ம. கவிதா**
**முனைவர் செ. ஜெயந்தி**

***Published by***

**RAJA PUBLICATIONS**
**10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,**
**Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.**
**Mobile : +91-9600535241**
**website : rajapublications.com**

**19** பகுதி-1 **Part -1**

Scanned with CamScanner

முனைவர் D. கவிதா எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர், தமிழ் உயராய்வுத்துறை
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல்
மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எலையாம்பாளையம், நாமக்கல்

# முகவுரை

உலகின் முதல் மொழியாகிய எம்மொழித் தமிழ் உலகிற்குப் பல மொழிகளைக் கொடுத்தது. எம்முடைய மொழிக்கு எம்மொழியிலிருந்தும் எக்காலத்தும் எதுவும் தேவையிருந்ததில்லை. புதிய பொருட்களை உலகம் பெற்றெடுக்கும் போதெல்லாம் தனக்குத் தேவையான சொற்களைத் தானே உருவாக்கிக் கொள்ளும் வலிமை கொண்டது.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த மொழியில் உருவானவற்றை ஆய்வாக உலகிற்கு எடுத்துச் சொல்லும் **'நவீனத் தமிழாய்விதழ்'** பணிகளில் மகிழ்வுடன் தொடர்ந்து பங்கேற்கும் ஆய்வாளர்களுக்கு ஆசிரியர்குழு நன்றி கூறுகிறது. தொடர்ந்து பங்கேற்கத் தங்கள் முன் வேண்டுகோள் வைக்கிறது.

நன்றியுடன்

**ஆசிரியர் குழு**

Scanned with CamScanner

சிறப்பிதழ் **Special Issue** | 3-4 பங்குனி 2052 16th - 17th March 2021 | ISSN : 2321 - 984X


| | | | |
|---|---|---|---|
| 1. | சி.தீபா & ரா.ரவிச்சந்திரன் | 'பூனாத்தி' சிறுகதை தொகுப்பில் எதார்த்த நிலை கதை மாந்தர்கள் | 1-5 |
| 2. | S. CHELLAPPA | மனிதனை ஆளும் ஐம்புலன்கள் | 6-10 |
| 3. | ம.கவிதா | சூர்யகாந்தன் நாவல்களில் குடும்பச் சிக்கல்கள் | 11-16 |
| 4. | க. இராஜேஷ் | ஆலயங்களில் தாள இசைச் சிற்பங்கள் | 17-20 |
| 5. | S. உமா | அறம்- ஓர் ஆய்வு | 21-25 |
| 6. | பெ.சுமதி | பரிபாடலில் மதுரை மக்களின் வாழ்வியல் | 26-34 |
| 7. | இ.கலைக்கோவன் | முருகவேள் படைப்புகளின் வழி மார்க்சிய பார்வையில் மனிதகுல வாழ்வியலும் சூழலியலும் | 35-40 |
| 8. | இரா. ஜெய்சங்கர் | ஆசாரக்கோவையில் சுகாதாரச் சிந்தனைகள் | 41-46 |
| 9. | ர.ரதி | இலக்கண உரைகளில் வாழ்வியல் விழுமியங்கள் | 47-51 |
| 10. | ப.குருசந்தர் | திரைத்துறையில் இலக்கியவாதிகள் | 52-56 |
| 11. | தா.க. அனுராதா | பாரதியார் கவிதைகளில் தேசிய ஒருமைப்பாடு | 57-60 |
| 12. | கு. பத்ம பிரியா | சங்க இலக்கியங்களில் வாழ்வியல் | 61-66 |
| 13. | ரா. ராஜேஸ்வரி | புதுக்கவிதையில் வாழ்வியல் | 67-70 |
| 14. | கா. சந்திரசேகரன் | பட்டினப்பாலை வெளிப்படுத்தும் மக்கள் விளையாட்டு | 71-74 |
| 15. | அ. லதா | சிறுதெய்வ வழிபாட்டில் செசக்கோம்பைக் கன்னி | 75-79 |
| 16. | SUNITHA MADHAVAN | THE EPIGRAPHIST OF EPIC PROPORTIONS | 80-88 |
| 17. | ஆ.ஏழுமலை | வெ. இறையன்புவின் நற்சிந்தனை | 89-93 |
| 18. | ஏஞ்சலின் பெராக்கா கிறிஸ்டோபல் & அலிஸ் ராணி | இரட்சணிய யாத்திரிகத்தில் வாழ்வியல் | 94-98 |
| 19. | இரா.ரம்யாமகேஸ்வரி & ந.பாமிதா | நற்றிணை கூறும் களவு வாழ்க்கை முறை | 99-103 |
| 20. | அ. ஜவி & ஜெ. சுஜாதா | விவேகசிந்தாமணி காட்டும் வாழ்வியல் கூறுகள் | 104-110 |
| 21. | வி.ஜெயபிரியா & க. தமிழ்ச்செல்வன் | உரையாடல் கலையில் படர்க்கை மாந்தரின் கூற்று | 111-118 |
| 22. | க. ஜெயந்தி & G.R. வள்ளியம்மாள் | வேதாத்திரி மகரிஷியின் மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்தான "அறிவே தெய்வம்" என்ற தத்துவத்தை பற்றிய ஓர் ஆய்வு | 119-124 |
| 23. | ஜா.காதர்மைதீன் | குறுந்தொகையில் முல்லை நில மக்களின் வாழ்வியல் நெறிமுறைகள் | 125-130 |
| 24. | அ.கோதேஸ்வரி & தா.ஷமிலா ஜோஸ்டர் | ஆண்டாள் பிரியதர்ஷினியின் சிறுகதைகளில் கணவன் மனைவி உறவுமுறைச் சிக்கல் | 131-135 |
| 25. | சி.லோகநாயகி & க. தமிழ்ச்செல்வன் | குறுந்தொகையில் எண்வகை மெய்ப்பாடுகள் | 136-143 |
| 26. | ப. மாக்கில்மா | அகநானூற்றில் பரணர் பாடல்களின் வழி மன்னர்களின் போர்த்திறம் | 144-147 |
| 27. | தே.மரிய மெர்லின் கவிதா & மி. கவிதா | கலித்தொகை காட்டும் ஆயர் வரைவுமுறை | 148-150 |
| 28. | மு. மெய்வேல் & பி. குருசந்தர் | எட்டுத்தொகை - அகஇலக்கியங்களில் முல்லைத் திணை தலைவி | 151-154 |
| 29. | மு. முனீஸ்மூர்த்தி | தமிழ் மரபில் 'சேரி' | 155-162 |
| 30. | த. முத்துலெட்சுமி & க.மல்லிகா | ஐங்குறுநூற்றில் வேளாண்மை சிந்தனைகள் | 163-167 |
| 31. | ச. பாண்டுரங்கன் | நா.முத்துக்குமார் படைப்புகளில் சமுதாயம் | 168-173 |
| 32. | ர.பரமேஸ்வரி | கிராமத்து நதி கவிதைகளின் வழி தமிழர் வாழ்வியல் | 174-179 |
| 33. | அ. இராஜலட்சுமி | நடுகல் வழிபாடு | 180-185 |
| 34. | கா.ரஜினி | யோகக் கலையும் சித்தர்களும் | 186-189 |
| 35. | பி.ராணி | தொல்காப்பிய அறுவகை இலக்கணங்களில் அளவு நிறைப் பெயர்கள் | 190-194 |
| 36. | கோ. இரவிச்சந்திரன் | புதுக்கவிதையில் பெண்ணியம் | 195-201 |
| 37. | ஆ. சசிகலா | உமையம்மை பற்றிய பிள்ளைத்தமிழில் வரும் பக்தியுணர்வு | 202-207 |
| 38. | ரா.சத்யா | காரிக்கைக்கு பின் உறுப்பிலக்கண வளர்ச்சி நிலைகள் | 208-213 |
| 39. | இரா.சாவித்திரி | பாலகுமாரன் புதினங்களில் பெண்ணியச் சிந்தனை | 214-218 |
| 40. | ம.சிவகாமி | திருமந்திரமும் இன்றைய வாழ்வியலும் | 219-223 |
| 41. | ஜ.ச.சுபாஷிணி & வெ. இராமதாஸ் | வேதாத்திரி மகரிஷியின் படைப்புகளில் குழந்தைகளுக்கான அறநெறிகள் | 224-229 |
| 42. | S. கன்யாதேவி | சிவவாக்கியரின் சமத்துவச் சிந்தனைகள் | 230-233 |
| 43. | ந.சுமதி | சு. தமிழ்செல்வியின் நாவலில் 'பொன்னாச்சரம்' | 234-238 |
| 44. | ப.கு.சுதா | சித்தர்கள் காட்டும் வாழ்வியல் அறங்கள் | 239-242 |
| 45. | ஆ. தியாகராஜன் | தமிழ் இலக்கியங்கள் சுட்டும் மருத்துவம் | 243-247 |
| 46. | அ.வடிவுக்கரசி | தமிழ்ப் சிற்றிதழ்களில் காணும் கட்டுரையின்வழி வாழ்வியல் | 248-253 |
| 47. | செ.விரலட்சுமி | குறுந்தொகை நெய்தல் திணை தலைவியின் வாழ்வியல் | 254-257 |
| 48. | ஜ.சுபி & ரா.விஜி | அறிவியல் இதழ்களில் தமிழ்மொழிநடையும் கலைச்சொல்லாக்கமும் | 258-261 |
| 49. | ச.விமலா | தமிழ்ப் பருவ இதழ்களில் சிறுகதைகளின்வழி வாழ்வியல் | 262-266 |
| 50. | கா.மைதீன்பீ | சிறுகதைகள் உணர்த்தும் மொழிநடை | 267-272 |


Published by : **Raja Publications**, No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House**, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

Scanned with CamScanner

# சூர்யகாந்தன் நாவல்களில் குடும்பச் சிக்கல்கள்

முனைவர் ம. கவிதா
துறைத்தலைவர், தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம், திருச்செங்கோடு, தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை

இலக்கியம் வாழ்க்கையில் பிறப்பது. வாழ்க்கையினைப் பிரதிபலிப்பது. மனித வாழ்க்கைக்கு உதவுவது. மனிதனால் ஆக்கப்படும் கலைச் சாதனம் என்ற முறையில் இலக்கியம் ஒரு சமுதாயத்தின் கடந்த கால அமைப்பையும், நிகழ்கால முறையையும், எதிர்கால நிலையையும் அறிந்து கொள்ள உதவுகின்ற காலக் கருவூலம் எனலாம். இலக்கியமும் சமுதாயமும் ஒன்றோடு ஒன்று இரண்டறக் கலந்து விட்ட நிலையில் சமுதாயத்தின் உண்மைநிலையை உணர இலக்கியத்தின் தேவை அவசியமாகிறது.

படைப்பாளனின் படைப்பில் இடம் பெறும் சிந்தனைகள் அனைத்தும் சமுதாய உணர்வு நிலையில் உன்னதமான உயர்ந்த இடத்தில் இருக்கின்றன. அச்சிந்தனைகள் சமுதாய நீதியை நிலைநாட்டி மனிதர்களின் உழைப்பிற்கு ஊக்க சக்தியைக் கொடுக்கின்றன. சமுதாயத்தை உயர்வடையச் செய்யும் சிந்தனைகளாக தற்கால இலக்கியச் சிந்தனைகள் அமைகின்றன. அத்தகைய வாழ்க்கையைப் படைத்துக் காட்டும் இலக்கியத்தை நாம் அறிகின்றபோது இலக்கியத்திற்கும் சமுதாயத்திற்கும் இடையே அமைந்துள்ள உறவானது தெளிவுற உணர்த்தப்படுகிறது.

## நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள்

மக்களின் கூட்டமைப்பே சமுதாயம் எனலாம். இச்சமுதாயத்தில் கால மாற்றத்தின் விளைவாகவும், மக்களிடையே மிகுந்துவரும் சுயநலப் போக்கின் காரணமாகவும் மனிதர்களுக்கிடையேயான ஒற்றுமை குறைகிறது. இத்தகைய ஒற்றுமைக் குறைவால் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாய் சமுதாயத்தில் கொலை, கொள்ளை, தீண்டாமை, பாலியல் கொடுமைகள், வன்முறைகள் போன்றன ஒவ்வொரு நாளும் பெருகி வருகின்றன.

இதன் காரணமாக இன்றைய சமுதாயத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை, சிக்கல்கள் நிறைந்ததாகவே அமைந்துள்ளது. இச்சிக்கல்களைச் சுட்டிக் காட்டுவதற்காகவும், அவற்றிற்கான சில தீர்வுகளை முன் வைப்பதற்காகவும் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு இலக்கியங்கள் தோன்றலாயின. அவற்றுள் நாவலானது சமுதாயத்தில் நிகழும் பிரச்சனைகளைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடியாக உள்ளது இங்கு சுட்டத்தக்கது. அந்த வகையில் சூர்யகாந்தன் நாவல்களில் காணலாகும் சமுதாயச் சிக்கல்களுள் குடும்பச் சிக்கல்களை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## குடும்பச் சிக்கல்கள்

குடும்பம் என்பது ஒரு குட்டிச் சமுதாயம். எனவே குடும்பம் எப்படி அமைகின்றதோ அதே பாங்கில் சமுதாயம் அமைகின்றது. தனிமனிதன் குடும்பம், சமுதாயம் இம்மூன்றும் ஒன்றோடொன்று மிக நெருங்கிய தொடர்புடையவை ஆகும். தனிமனிதன் சமுதாயத்தின் நெறிமுறைகளைப் பின்பற்றி வாழும் போது, அவன் சமுதாயத்தின் ஓர் அங்கமாகின்றான். தனிமனிதன் தனக்குரிய கடமைகளையும், செயல்களையும் சமுதாயத்தின் துணையால் அறிந்து கொள்கின்றான். அத்தகைய கடமைகள் மற்றும் செயல்பாடுகளை நிறைவேற்றிக் கொள்ள, தான் சார்ந்துள்ள குடும்பம், அரசு போன்ற நிறுவனங்களை தொடர்பு கொள்ள வேண்டிய இன்றியமையாமை அவனுக்கு நேர்கின்றன.



Scanned with CamScanner

குடும்பமானது வாழ்க்கைத் துணையின் எண்ணிக்கை, குடும்பத் தலைமை, குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் தனிக்குடும்பம், கூட்டுக்குடும்பம் என்ற இருவகைகளிலேயே பெரும்பாலும் அமைகிறது. இத்தகைய குடும்ப உறவுகளில் பொருளாதாரத்தின் அடிப்படையில் ஏற்படும் சிக்கல்களே குடும்பச் சிக்கல்களுக்கு அடித்தளமிடுகின்றன.

### கூட்டுக் குடும்பச் சிதைவு

தாய், தந்தை, அவர்தம் பெற்றோர்கள், பிள்ளைகள், அவர்தம் கணவன், மனைவியர் ஆகியோர் ஒன்று சேர்ந்து தந்தையின் பொறுப்பில் இயங்குகின்ற குடும்பமே கூட்டுக் குடும்பமாகும். இந்தியக் குடும்பங்கள் பெரும்பாலும் கூட்டுக் குடும்பங்களாக இருக்கின்றன.

'ஒரே மரபு வழியைச் சேர்ந்த இரத்த உறவுடைய இருவரோ அல்லது அதற்கு மேற்பட்டவர்களோ ஒரே வீட்டில் ஒரே தலைமையின் கீழ் தங்கள் மனைவியர்களுடனும், குழந்தைகளுடனும் கூடி வாழ்தல் கூட்டுக் குடும்பம் எனக் கூறப்பட்டுள்ளது.''[1]

கூட்டுக் குடும்பத்தினால், சமூகப் பொறுப்புணர்ச்சியை ஒருவன் சிறுவயதிலிருந்தே பெற முடியும். மேலும், அவனிடையே கூடி வாழும் உணர்வும் பாதுகாக்கப்படுகிறது. தனிமனித ஒழுக்கமும் கூட்டுக் குடும்பங்களிலேயே பெரிதும் பேணப்படுகிறது. அந்தக் கால மக்கள் கூட்டுக் குடும்பமாகவே வாழ்ந்தார்கள். அப்பொழுது பெரியவர்கள் சொற்களை மதித்தே குடும்பத்தில் உள்ளவர்கள் நடந்தார்கள். ஆனால் இந்தக் காலத்தில் குடும்பங்களை அனுசரித்து நடக்க விரும்பாமல் தன்னிச்சையாக செயல்பட வேண்டுமென்ற மனிதனின் எண்ணப்போக்கினாலும், குடும்ப உறுப்பினர்களின் இடையேயான மனவேறுபாட்டின் காரணமாகவும், சொத்துப் பிரிப்பு சண்டையின் காரணமாகவும் கூட்டுக் குடும்பங்கள் பிளவுபட்டு சமுதாயச் சிக்கலுக்கு அடிகோலுகின்றன.

'கல்வாழை'... நாவலில் வரும் செல்லமுத்துவின் குடும்பம் மூன்று மகன்கள், மூன்று மகள்களை உள்ளடக்கிய கூட்டுக் குடும்பம். மகள்களின் திருமணத்திற்குப் பிறகு மகன்களுக்கு திருமணம் செய்விக்கிறார் செல்லமுத்து. திருமணம் வரையிலும் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்த மகன்கள் திருமணத்திற்குப் பிறகு தங்களது மனைவியின் தூண்டுதலினால் பெற்றோர்களை கவனிக்கத் தவறியவர்களாய் தனிக்குடித்தனம் செல்ல முற்படுவதை பின்வரும் பகுதியின் வழி அறியலாம்.

'ஆறுமுகம் கொஞ்ச நாட்கள்தான் பெற்றோர்களைப் பராமரிப்பவனாய் இருந்தான். ஆனால் அவனுடைய மனைவியின் தூண்டுகோல், துவட்டிப் போட்டு விட்டது என்று எண்ணும்படியாக அவன் நடவடிக்கைகளில் மாற்றங் காணலாயின. உங்க அண்ணன்காரன் இங்கியே இருக்காங்களே அவிக பெத்தவங்களை பாத்துக்கட்டும் உங்களுக்குன்னு தனியா இந்த வீட்டை எழுதி வைக்கப் போறாங்களா? அருத்தமில்லாம நாம எதுக்கு இவிகளுக்காக இக்கல் படோணும்''[2]

நவீன சமூகம் வாணிகத்தை முதன்மையாகக் கொண்டு விட்டதால் குடும்பம் அதன் நுகர்வு மையமாகி விட்டது. அனைத்து வகையான நுகர்வும் பணத்தின் மூலமாகவே அமைந்துவிட்டதால் வாழ்க்கையை நிர்மாணிக்கும் சக்தியாக பணமே விளங்குகின்றன. மேலும் குடும்ப உறுப்பினர்களின் உணவு, உடை, உறையுள், திருமணம், இறப்பு, பிற சடங்குகள், கல்வி மருத்துவச் செலவுகள் இன்னோரன்ன குடும்பத் தேவைகள் பணத்தாலேயே ஈடேறுகின்ற காரணத்தால் இன்றைய குடும்பங்களில் உறவுகளுக்கு மதிப்பில்லை என்ற உண்மையை நாவலானது பதிவு செய்துள்ளது.

'கிழக்கு வானம்'... நாவலில் வரும் மாசய்யனின் குடும்பம் மூன்று மகன்களை உள்ளடக்கிய கூட்டுக்குடும்பம். மகன்களுக்கு திருமணம் ஆகும் வரையிலும் காடு, தோட்டம், வீடு என்று பொது



Scanned with CamScanner

வருமானத்தில் வாழ்ந்த அக்குடும்பமானது மூத்த மகனின் பணத்தாசையினால் பிளவுபட்டு சிதைவிற்குள்ளாகிறது. கடைசி வரை தனது மூன்று மகன்களின் நிழல்களில் வாழ வேண்டும் என்ற தாய் தந்தையரின் எண்ணமானது, இத்தகைய கூட்டுக்குடும்பச் சிதைவினால் தவிடு பொடியாகிறது.

'மூன்று ஏக்ராவையும் தன்னுடைய மூன்று மகன்களுக்கும் ஆளுக்கு ஒரு ஏக்கர் வீதம் பிரித்துக் கொடுத்து கிரையப் பத்திரத்தில் மாசய்யன் கையெழுத்துப் போட்டுவிட்டார். குரும்பபாளையத்து வயலில் இருந்து வாங்கிக் கொண்டு வந்த பணம்கூட பங்கு போடப்பட்டு மூணு பேருக்கும் தரப்பட்டிருந்தது. இத்தென நாளும் அவங்கொண்டாற பணம் ஊட்டுக்குப் பொதுவில் போட்டு செலவு செய்துட்டு இருந்துச்சு. இனிமே அது அப்படிப் போடுறது செரிப்படாதுனுதான் இப்பிடிப்பிரிச்சுக் குடுத்திருக்குது'[3]

என்று ஊர்ப் பெரியவர்கள் முன்னிலையில் பாகங்கள் பிரிக்கப்பட்டு விட தாய் தந்தையரின் உள்ளம் பரிதவிப்பிற்குள்ளாகிறது. பணம் ஒன்றையே பிரதானமாகக் கொண்ட மூத்தமகனின் செய்கையினாலும், தனிக்குடித்தனம் செய்ய வேண்டும் என்ற மூத்த மருமகளின் எண்ணப் போக்கினாலும் காலங்காலமாக கட்டிக் காப்பாற்றப்பட்ட கூட்டுக் குடும்ப அமைப்பானது சிதைவிற்குள்ளாகிறது.

'காலத்தின் ஓட்டத்தில் நாகரீகத்தின் வளர்ச்சியில் பண்பாட்டு மலர்ச்சியில் மனித குலத்துக்குப் பரிசாக வாய்ந்ததுதான் குடும்பம். அது உறவுகளின் சங்கிலியால் உருவெடுத்தது. ஒரு வளையம் பலவீனமடைந்தால் சங்கிலி முழுவதும் பலவீனமடைவது போல் ஒரு நபர் நலிவடைந்தால் குடும்பம் முழுவதும் நலிந்து விடும்'[4]

என்ற தமிழருவி மணியன் அவர்களின் கருத்தின் வழி மூன்று மகன்களை உள்ளடக்கிய குடும்பத்தில், மூத்த மகனின் சுயநலப்போக்கானது குடும்பம் மொத்தமும் சிதைவடைவதற்கு காரணமாக உள்ள தன்மையானது இங்கு சுட்டத்தக்கது. தனிமனிதனின் இத்தகைய தன்னலப் போக்கானது கூட்டுக் குடும்பத்தில் வெளிப்படும் போதுதான் குடும்பம் சிதைவிற்குள்ளாகிறது. மேலும் பணத்தால் ஏற்படும் பற்றாக்குறையினாலும், பணம் இன்மையினாலும் குடும்பம் எதிர்கொள்கின்ற சிக்கல்களில் பெரும்பாலும், பெற்று வளர்த்த பிள்ளைகளுக்கு தங்களது பெற்றோர்களே சுமையாகக் கருதப்பட்டு நிராதரவாய் தவிக்க விடப்படுகின்றனர். குடும்பத்தின் மூத்த வழிகாட்டிகளான பெற்றோர்களுக்கு உண்டாகின்ற இத்தகைய அவலமானது சமூகச் சிக்கல்களுள் ஒன்றாக அமைவது கண்கூடு.

## சொத்துப் பிரிவினை

ஒரு சமுதாயத்தின் பொருளாதார அமைப்பு முறை என்பது மிகமிக முக்கியமானதாகும். சமூகத்தின் இயக்கம் பொருளாதாரத்தின் வழியே இயங்குகின்றது. அதேபோல் வாழ்வின் தேவை, குடும்ப இயக்கம் அனைத்தும் பொருளாதாரத்தின் அடிப்படையில் தான் நிர்ணயிக்கப்படுகிறது. எனவே பொருளாதாரத்தின் தேவையானது குடும்ப உறுப்பினர்களிடையே மேலோங்கும் போது, அவர்களிடையே மோதல், சொத்துப்பிரிப்புத் தகராறு போன்றவைகள் ஏற்பட்டு குடும்ப அமைப்பு முறையில் சிக்கல் ஏற்படுகின்றன.

'மானாவாரி மனிதர்கள்'... நாவலில் வரும் பெரியசாமியின் மூத்த மகன் பொன்னப்பன், பல வருடங்களாக மழை மறந்து போன தங்களது விவசாய நிலங்களால் தங்களது பொருளாதாரத் தேவையை ஈடுசெய்து கொள்ள முடியாத நிலையில், இருக்கிற நிலங்களையும், வீட்டையும் விற்று விட்டு வரும் பணத்தில் வேறு இடத்தில் பண்ணையம் பார்க்கலாம் என்ற முடிவில் தனது தந்தையுடன் சொத்துப் பிரிப்புத் தகராறில் ஈடுபடுகிறான். அதன்பொருட்டு பாதிப்பிற்குள்ளாகும் தந்தையின் மனநிலையானது, நாவலுள் பின்வருமாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.



Scanned with CamScanner

'போறவிகெல்லாம் போய்ச் சேருங்க, காலமெல்லாங் கஷ்டப்பட்டு, உழுந்து பொரண்டு எந்துரிச்ச இந்தச் செம்மண்ணெ அரவெலைக்கோ, கால்வெலைக்கோ வித்துப் போட்டு மேக்கெயும், வடக்கெயும் பஞ்சம் பொழைக்கப் போறம்னுட்டுப் போங்க.. இத்தென நாளா எலும்பொடியப் பாடுபட்டு எதோ இந்த மண்ணெ கட்டிக்காத்து வெச்சிருந்தே இப்ப மக்கமாருக தோணி இதெயும் வித்துக் கருக்கிப் போட்டு போறதுக்குக் காலம் வந்துடுச்சு....ம்.. என்னமோ பண்ணுங்க''[5]

பெரியசாமியின் அடிமனதிலிருந்து வெளிவந்த இந்த வேதனையின் வெளிப்பாடானது, தலைமுறை தலைமுறையாக கட்டிக் காத்த குடும்பச் சொத்தினைப் பங்குபோட்டுப் பிரித்துக் கொடுக்கும் ஆதங்கத்தினால் உண்டாகின்றது. இன்றைய சூழலில் பல்வேறு சிக்கல்களுக்கிடையே இயங்கி வரும் குடும்ப அமைப்புகள் பல்வேறு மாற்றங்களுக்கும், சிதைவுகளுக்கும் உள்ளாகி வருவது ஒரு தொடர்ச்சியான நிகழ்வாகவே இருந்து வருகின்றது. இத்தகைய குடும்பச் சிதைவுகளுக்குப் பெரும்பாலும் குடும்ப உறுப்பினர்களின் சுயநலப் போக்கே காரணமாக அமைகின்றது.

'வாழ்க்கையில் நம்மைச் சுற்றியுள்ளவர்கள் நல்லவர்களாக வாய்த்து விட்டால் அது பெரிய செல்வம்தான். நல்ல குடும்பம் வாய்க்காதவர்களின் உலக வாழ்க்கை கையால் கடலை நீந்துதல் போன்றது. குடும்பத்தில் நல்லவர்களாக வாய்த்து வாழ்க்கை நடத்துதல், நல்ல கப்பலில் அமர்ந்து கடல் கடத்தலைப் போன்றது'[6]

என்ற கருத்தின் வழி குடும்ப உறுப்பினர்கள் அனைவருமே நல்லவர்களாக அமைந்து விட்டால் அந்தக் குடும்பத்தில் எவ்விதமான சண்டை சச்சரவுகளும் இராது. இருப்பினும் அத்தகைய குடும்பங்கள் எல்லோர்க்கும் வாய்ப்பதில்லை என்பதே யதார்த்த நிலையாகும். என்பது நாவலுள் சுட்டப்பட்டுள்ளது.

'அழியாச் சுவடு'... நாவலில் வரும் ஆரப்பனது மகன்களில் இளையவன் சின்னராசு, தனது திருமணத்திற்குப் பிறகு தனது மாமனாரின் தூண்டுதலினால் தனது தந்தையுடன் சொத்துப் பிரிப்புத் தகராறில் ஈடுபடுகின்றான். இருக்கும் நிலங்களுள் வளமுள்ள பகுதி தன்னையே வந்தடைய வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் இளைய மகனின் எண்ணப்போக்கை உணர்ந்த பெரியசாமி பின்வருமாறு தனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகிறார்.

'மக்கமாருக எப்பிடி எங்களுக்குச் செரி சமமோ அப்பிடித்தானுங்க. நாங்க சம்பாதிச்சுக் கட்டிக் காத்து வெச்சிருந்த இந்த தோட்டத்து நெலமும், இதைப் பங்கு போட்டுக் குடுக்கிறதுன்னா ரெண்டுபேர்த்துக்கும் ஏத்தமோ தாழ்வோ இல்லாமத் தானுங்க பண்ணோனும் பூமிக்குள்ளெ கெணறும் இருக்குது. போரிங் குழியும் இருக்குது. ஓடுபோட்ட ஊடும் இருக்குது. தென்னெ மட்டை பனை மட்டைல மேய்ஞ்ச சாளையும் இருக்குது''[7]

என்பதாக தனது சொத்துக்கள் அனைத்தையும் பட்டியலிட்டு மகன்கள் இருவருக்கும் சரிசமாக கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கும் ஆரப்பனின் மனநிலையானது இங்கு வெளிப்படுகிறது. பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனிடமும் குறைகளும், நிறைகளும் உண்டு. அப்படி நோக்குகிறபோது அவனிடம் எது மிகுந்துள்ளதோ, அதன் அடிப்படையில் அவனது பண்புகள் வெளிப்படுகின்றன. இங்கு சுயநலப் போக்கோடு மகன் சிந்தித்தாலும் வீட்டின் தலைவரான தந்தையால் அத்தகு செய்கையானது தடைசெய்யப்படுகிறது.

'குடும்பத்தில் பொருளாதாரத்தின் பங்கு தேவை, நுகர்வு என்ற இரண்டு நிலைகளில் அமைகின்றது. உணவு, உடை, உறையுள் இன்னோரன்ன தேவைகளாலேயே நிலைபெற்று வந்த குடும்ப வாழ்வு வேறு பல பரிமாற்றங்களையும் கொண்டு



Scanned with CamScanner

விளங்குவதால் அதன் இன்றியமையாமை கூடுகின்றது. இத்தேவைகள் நிறைவேறாத அளவில் அதன் இயக்கம் சீரான நிலையில் இல்லாமல் சிக்கலுக்கு இடமாகின்றது"[8]

குடும்பங்கள் காலந்தோறும் பல பரிணாமங்களைப் பெற்று வந்திருப்பினும் நவீனக் காலக் குடும்பங்களிலும் இந்தச் சிக்கல்களை மிகுதியாகக் காணமுடிகிறது. ஆரம்ப காலகட்டத்தில் குடும்பத்தில் பொருளாதாரத்தால் எழுகின்ற சிக்கல் என்பது பற்றாக்குறையினால் ஏற்பட்டதாகும். ஆனால் இன்றைய சூழலில் பணத்தாசையின் காரணமாகவும், தனி மனித சுயநலப்போக்கின் காரணமாகவும் குடும்பத்தில் எழுகின்ற சிக்கலானது குடும்ப அமைப்பினைச் சிதைப்பதோடு உறவுகளின் முக்கியத்துவத்தையும் குலைக்கிறது என்பது இங்கு நோக்கத்தக்கது.

### பொருளாதாரச் சிக்கல்கள்

மனிதன், சமூக மதிப்பீட்டைப் பெறவும், குடும்பத்தை வழி நடத்தவும் பொருளாதாரம் என்பது மிக முக்கியமானதாகும். சமுதாயத்தில் வாழும் மக்களைப் பல்வேறு காரணிகளின் அடிப்படையில் பாகுபடுத்தும் நிலை உள்ளது. பொருளாதாரத் தேவை மனிதருக்கு மனிதர் மாறுபட்டு அமைவதால் அவர்களின் தேவைகளும் மாறுபட்டு அமைகின்றன. அத்தகைய தேவைகள் நிறைவேற்றப்படாத நிலையிலேயே அவை சமுதாயச் சிக்கல்களாக உருவெடுக்கின்றன.

'ஓர் சமுதாயத்தின் பொருளாதார அமைப்பு முறை என்பது மிகமிக முக்கியமானதாகும். சமூகத்தின் இயக்கம் பொருளாதாரத்தின் வழியே இயங்குகின்றது. எனவே தான் சமுதாயம் பொருளாதாரப் பண்பாட்டில் அதிக கவனம் செலுத்துகின்றது. வாழ்வின் தேவை, குடும்ப இயக்கம் அனைத்துமே பொருளாதாரத்தின் அடிப்படையில் தான் இயங்குகின்றது.'"[9]

சமுதாயத்தில் பொருளாதாரம் மிக இன்றியமையாதது. பணம் இருந்தால் மட்டுமே மனிதனது வாழ்க்கை செம்மையடையும் என்ற எண்ணப்போக்கே பெரும்பான்மையான மனிதர்களிடையே காணப்படுகிறது. நாட்டில் நிலவி வரும் வறுமை, பஞ்சம், பட்டினி போன்ற நிகழ்வுகள் அனைத்துமே பொருளாதாரப் பற்றாக்குறையினாலேயே ஏற்படுகின்றன என்பது ஆசிரியரது பல நாவல்களில் எதார்த்தமாக சுட்டப்பட்டுள்ளது.

'கல்வாழை'.... நாவலில் வரும் நடேசன் தனது நன்னடத்தை, மற்றும் நற்செயல்களினால் ஊரில் நல்லவன் எனப் பெயரெடுத்தவன். இருப்பினும் திருமணத்திற்குப் பிறகான தனது வாழ்க்கையில் நிரந்தர தொழில் அமையாமையினால் வருமானம் இன்றி வாழ்க்கையை நடத்த சிரமப்படுகிறான். குடும்பத்தின் பொருளாதாரத் தேவையை ஈடுசெய்ய முடியாத அவன், அது நாள் வரையில் தான் எடுத்திருந்த நற்பெயர் அனைத்தையும் இழந்து நிற்கும் நிலையானது, நாவலுள் பின்வருமாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

'இவனுக்கே சரிவர வேலை கிடைப்பதில்லை. தூரந் தொலைவெல்லாம் போனாலும் நாள் கூலிக்கும் கூட கட்டுப்படி ஆவதில்லை. சம்பாத்தியம் என்ன ஆச்சு அத்தனையையும் தொலைச்சுப் போட்டு இங்கே வெறும் கையோட எதுக்கு வரோணும்? இதுதான் ஆம்பளைத் தனமா?'"[10]

என்ற மனைவியின் கேள்விகளுக்கு பதில் சொல்ல இயலாத நடேசனின் நிலையானது நாவலுள் விளக்கப்படுகிறது. வாழ்க்கை என்பது இன்பமும், துன்பமும் கலந்த கலவை ஆகும். இருப்பினும் இத்தகைய இன்பத்தையும், துன்பத்தையும் மனிதனுக்கு வழங்கக்கூடிய காரணிகளில் முக்கியமானதாக அமைவது பொருளாதாரம் எனலாம்.

'எதிரெதிர் கோணங்கள்'... நாவலில் வரும் மணி அய்யர் பொருளாதாரத்தில் பின்தங்கிய சூழலில் வாழ்க்கையை நடத்துபவர். அதன் பொருட்டு துக்க காரியங்களுக்குச் சடங்கு செய்ய வருபவர்களை



Scanned with CamScanner

பேருந்து நிலையத்திலேயே காத்திருந்து கூட்டி வந்து அவர்களது வசதிக்கேற்ப ஆற்றங்கரையில் பூஜையை செய்து முடித்து விட்டு அவர்கள் தரும் காணிக்கையைப் பெற்றுக்கொள்பவர். பொழுது விடிந்தால் தனது வருமானத் தேவையின் பொருட்டு சடங்குகள் செய்ய வருகின்றவர்களைக் கண்டறிந்து, கூட்டி வந்து பூஜைக்கு அமர வைப்பது வரையிலான அவர்களது துயரங்கள் நாவலுள் பின்வருமாறு எடுத்துக்காட்டப்படுகின்றன.

'இருபது குடும்பங்களுக்குப் பக்கமாக கருமாதிக் காரியங்களைச் செய்கிற தொழில் மூலம்தான் சம்பாத்தியம். இப்படி பஸ் ஸ்டேண்டில் மேல் துண்டோடு காத்திருந்து வருகிற ஆட்களை இந்தக் காரியத்துக்காகத்தான் வந்தவர்கள் என்பதைக் கண்டறிந்து அவர்களோடேயே விடாப்பிடியாகச் சென்று குறைந்த செலவில் நிறைவாகச் செய்து தருகிறோம் எனப் பேசி முடித்து, நொய்யலாற்றங் கரைக்கு அழைத்துச் சென்று உட்கார வைப்பது வரை அவர்கள் எடுத்துக் கொள்கிற சிரமம் அலாதியானது தான்''[11]

சமுதாயத்தில் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்களாகிய வறியவர்களின் பல்வேறு இயலாமை நிலைகளையும், இழிவுநிலைகளையும் ஆசிரியர் தமது நாவல்களில் அதன் இயல்பு குறையாமல் எடுத்துரைக்கிறார். வறியவர்கள் தங்களது அன்றாட வாழ்க்கையில் உண்ணும் உணவு, உடுத்தும் உடை இவைகளுக்காக இடையறாது நடத்தும் போராட்டமே வாழ்க்கையாக நீள்கிறது என்பதை இராமலிங்க அடிகள் பின்வருமாறு வேதனையோடு எடுத்துரைக்கிறார்.

'உண்ணும் உணவுக்கும் உடைக்கும் முயன்றோடுகின்ற மண்ணுலகத்தென்றன் மயக்கறுத்தல் ஆகாதோ''[12]

என்ற பாடல் வரிகள் இங்கு சுட்டத்தக்கது.

## முடிவுரை

சமுதாயத்தில் வளர்ச்சி என்பது தனிமனிதனின் வளர்ச்சியைப் பொறுத்தே அமைகிறது. மேலும் தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் இடையேயான வழிவழி வந்த உறவுநிலையே இலக்கியத்தின் அடிப்படையாக அமைகிறது. தனி மனிதனின் தலைமையில் அமையும் குடும்ப அமைப்பில் பொருளாதாரப் பற்றாக்குறையினால் ஏற்படும் சிக்கல்களே குடும்பச் சிக்கல்களுக்கு காரணமாக அமைகின்றன. குடும்பத்தில் பொருளாதாரத் தேவையானது மேலோங்கும் போது, குடும்ப உறுப்பினர்களிடையே மோதல், சொத்துப்பிரிப்புத் தகராறு போன்றன ஏற்பட்டு குடும்ப அமைப்பு முறையில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. சிக்கல்களும், போராட்டங்களும் நிறைந்த வாழ்க்கைப் பயணத்தில், அவற்றை எதிர்க்கும் துணிவு மனிதர்களிடம் தோன்றும் பொழுதே, சிக்கல்கள் களையப்பட்டு, தன்னிறைவு பெற்ற சமுதாயம் உருவாகும் இ என்பதே இவ்வாய்வின் வழி நிறுவப்பட்டுள்ள உண்மையாகும்.

## சான்றெண் விளக்கம்


1. 'தமிழ் நாவல்களில் மனித உறவுகள்' - ப-40 பி.வெ. சுசீலா
2. 'கல்வாழை' ப-164 சூர்யகாந்தன்
3. 'கிழக்குவானம்' ப-131 சூர்யகாந்தன்
4. 'ஊருக்கு நல்லது செய்வேன்' ப-40 தமிழருவி மணியன்
5. 'மானாவாரி மனிதர்கள்' ப-24 சூர்யகாந்தன்
6. 'மு.வ. வின் நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள்' ப-151 டாக்டர் அ.சிவக்கண்ணன்
7. 'அழியாச்சுவடு' ப-169 சூர்யகாந்தன்
8. 'தமிழ் நாவல்களில் குடும்பச் சிதைவுகள்' ப.49 முனைவர் அ. குணசேகரன்
9. 'செம்மொழி இலக்கியமும் சமூகவியல் கோட்பாடும்' ப-108 எல்.கே. அக்னிபுத்ரன்
10. 'கல்வாழை', ப-160 சூர்யகாந்தன்
11. 'மானாவாரி மனிதர்கள்'. ப-33 சூர்யகாந்தன்
12. 'திருவருட்பா' இராமலிங்கஅடிகள்




Scanned with CamScanner